# குழந்தைகளுக்கு வேதாகமம்

## வழங்குபவர்

# இயேசுவும் லாசருவும்




எழுதியவர்: Edward Hughes
சித்தரிப்பவர்: Janie Forest
மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj
தழுவியவர்: Ruth Klassen



**கதைகள்** 60 **ல்** 52

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*



உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.


Tamil

மரியாளும் மார்த்தாளும் கவலைப்பட்டார்கள். அவர்களுடைய சகோதரனாகிய லாசரு மிகவும் வியாதியாயிருந்தான். சகோதரிகளுக்கு அவன் சீக்கிரத்தில் மரித்துப்போவான் என்று தெரிந்தது.





இயேசுவிடம் ஆள் அனுப்பினார்கள். பெத்தானியாவிலிருந்த இந்த சிறிய குடும்பத்தை இயேசு நேசித்தார்.



இயேசு லாசருவைப் பற்றி கேள்விப்பட்டபோது தன்னுடைய சீஷர்களைப் பார்த்து சொன்னார், "இந்த வியாதி மரணத்தில் முடிவதில்லை," ...




... இயேசு அநேக மையில்களுக்கு அப்பால் இருந்தாலும் கூட, லாசருவுக்கு என்ன நடக்குமென்று இயேசுவுக்கு நன்றாக தெரிந்திருந்தது.




பெத்தானியாவிற்கு செல்வதற்குமுன் இயேசு இரண்டு நாட்கள் காத்திருந்தார். பின்பு அவர் சொன்னது சீஷர்களை வியக்கவைத்தது.




"லாசரு மரித்து போனான். நீங்கள் விசுவாசிப்பதற்காக நான் அங்கே இல்லாதிருந்தது நல்லது." இந்த விசித்திரமான வார்த்தையின் அர்த்தமென்ன? இயேசு என்ன செய்ய திட்டமிட்டிருந்தார்?




இயேசு பெத்தானியாவிற்கு வந்தபோது, லாசரு மரித்து நான்கு நாளாயிற்று, ...




... அவனுடைய சரீரமானது, பிரேத துணியில் கட்டி, குகை போன்ற கல்லறையில் வைக்கப்பட்டிருந்தது.




மார்த்தாள் இயேசுவை சந்திக்கச்சென்றாள். "உன்னுடைய சகோதரன் திரும்பவும் உயிர் பெறுவான்," என்று இயேசு சொன்னார்.
9
"எனக்குத்தெரியும் - கடைசியில் உயிர்தெழுதல் நாளில்," என்று மார்த்தாள் பதில் சொன்னாள். லாசருவை மறுபடியும் பார்க்க கடைசி நாட்கள் வரை காத்திருக்க வேண்டுமென அவள் யோசித்தாள்.
10
ஆனால் இயேசுவோ வேறொன்றை நினத்திருந்தார்.
11
"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்," என்று இயேசு மார்த்தாளிடம் கூறினார். "என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்."
12
மார்த்தாள் இயேசுவை விசுவாசித்தாள். அவர் தேவனுடைய குமாரன் என்று அவளுக்குத் தெரியும். ஆனால் லாசருவுக்கு அவர் எப்படி உதவி செய்ய முடியும்?
13
லாசரு மரணமடைந்ததினாலே எல்லோரும் துக்கமாயிருந்தார்கள். அவனுடைய சகோதரி மரியாள் அழுது கொண்டிருந்தாள். அவளுக்கு ஆறுதல் கூறின சிநேகிதர்களும் அப்படியே அழுது கொண்டிருந்தார்கள்.
இயேசுவும் அழுதார்.
14


இயேசு ஜனங்களுடன்
கல்லறைக்குச் சென்றார்.
அந்த கல்லறையை ஒரு
பெரிய கல்லைக்கொண்டு
மூடியிருந்தார்கள்.
15
"கல்லை அப்புறப்படுத்துங்கள்,"
என்று இயேசு கட்டளையிட்டார்.
"ஆண்டவரே" மார்த்தாள்
பதிலளித்தாள்,
"இப்போது நாறுமே,
செத்து நான்கு
நாட்கள்
ஆயிற்றே."
16
இயேசு
கட்டளையிட்டபடியே
கல்லை அங்கிருந்த
மனிதர்கள் அப்புறப்படுத்த
ினார்கள். பின்பு
இயேசு தன்னுடைய
பரலோக பிதாவிடம்
விண்ணப்பம் பண்ணினார்.
17
தேவன்
தன்னை
இவ்வுலகிற்கு
அனுப்பினார் என்று
ஜனங்கள் அறியும்படி
இயேசு ஒரு பெரிய
அற்புதத்தை
நடத்தப்போகிறார்.
18
"லாசருவே!"
இயேசு சத்தமிட்டார்.
"வெளியே வா"
ஜனங்கள் கல்லறையை
ஆச்சரியத்துடன்
உன்னிப்பாக
பார்த்திருப்பார்கள்.
இயேசுவால் ஒரு
மரணமடைந்த
மனிதனை உயிர்
பெறச்செய்ய
முடியுமா?
19
ஆம்! பிரேதத்
துணியால்
சுற்றப்பட்டவனாய்
லாசரு உயிருடன்
கல்லறையிலிருந்து
வெளியே வந்தான்.
20













இயேசுவும் லாசருவும்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

யோவான் 11

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.